முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் குமரகுருபரர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

14.03.2019, வியாழக்கிழமை

1. **மனித பண்புகளை காத்து**
**மாண்புகளை வளர்த்து கலியுகத்தில்**
**அநீதி மாந்தர்களை ஒழித்து**
**ஆன்மீக ஞான சமூகம் அமைக்க**

2. அமைக்க குருவாய் வந்தநல்
ஆறுமுக அரங்கமகா தேசிகன்
அமைக்கும் ஞான ஆட்சிதனில்
அகிலத்தார் பங்களிப்பு காண

3. காணவே கலியுகம் தேறுமெனக் கூறி
கண்டுரைப்பேன் **விளம்பி சால் திங்கள்**
**ஞானம்பட முப்பான் திகதி குருவாரம்**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 30ம் நாள் 14.03.2019, வியாழக்கிழமை)**
**நாட்டிடுவேன் நித்ய பிரசன்ன ஆசி**

**4. ஆசியை குமரகுருபரர் யானும்**
அருளுவேன் உலகோர் நலம்பெற
நேசக்கரம் கொண்டு உலகோர்
நேருமைபட வாழ்க்கை நடத்தி

5. நடத்தியே தயவுநிலை பெருக்கி
ஞானதேசிகன் வழிகாட்டலில்
தடையிலா தொடர்ந்து வருக
தன்னார்வ தொண்டு பெருக்கி வர

6. வருகவே உலக சமூகத்தில்
வஞ்சம் வக்கிர கொடூர குணங்கள்
மாறுதலாகி இயல்பு நிலைகள்
மனித நேயம் நற்பண்புகள் பெருகி

7. பெருகியே மக்களெல்லாம் சிறப்பர்
பிரச்சனைகளில்லா வாழ்வு காண்பர்
முருகப்பெருமான் வழிபாட்டுடன்
முழுமைபட சரணடைவு கொண்டு வர

8. வருகவே கலியுக மக்களுக்கு
வளமான சிந்தையும் பலமும்
தரும நோக்கும் தனதேட்டு பலமும்
தன்னம்பிக்கையும் சிறந்து நன்கு

9. சிறந்துமே அரங்க ஞானியரின்
சிறப்பறிவு ஆளுமை பெருகி
பரந்த பேருலகே ஞானபலம்
பரவியே ஞானயுக மாற்றம்

10. மாற்றம் அரங்கன் வழியில்
மகத்துவமுள சீடர்களை கொண்டு
மாற்றம் தமிழகம் தொட்டு
மண்ணுலகே அடைய நேரும்

11. நேருமைபட தொடர்ந்து வருக
ஞானதேசிகன் சீடர்களாகிவர
தரும ஞான ஆட்சி அமையும்
தாமுரைத்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் குமரகுருபரர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

மனிதனுக்கே உரித்தான மனிதநேயம் எனும் நற்பண்புகளை மனிதனிடமிருந்து நீங்கிவிடாமல் நன்னெறிப்படுத்தி காத்து மனித மாண்புகளை வளர்த்து மாமாயை சூழ்ந்துள்ள கலியுகத்தினில் உள்ள அநீதிவழி செல்கின்றவர்களை ஒழித்து உலகினில் ஆன்மீக ஞான சமூகத்தினை அமைத்திடவே உலகையே வழிநடத்தும் வல்லசற்குருவாக வந்திட்ட, உத்தம மகா ஞானி முருகப்பெருமானின் அவதாரமாகிய ஆறுமுக அரங்கமகா தேசிகனார் அமைக்கின்ற ஞானஆட்சியில் உலக மக்களும் பங்களிப்பு செய்திட இந்த கலியுகம் கடைத்தேறிடும் எனக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் மாசி மாதம் 30ம் நாள் 14.03.2019, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே குமரகுருபரர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் குமரகுருபரர்.

உலக மக்களெல்லாம் பகைமைகளை மறந்து நேசக்கரம் கொண்டு நட்புடன் வாழ்க்கை நடத்தி ஒவ்வொருவருள்ளும் தயவு உணர்வினை பெருக்கி உத்தம மகா ஞானி அரங்கர் கூறும் தூய ஞானநெறியினை ஏற்று உலக மகா குருநாதன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வழிகாட்டலில் மக்கள் தடையின்றி தொடர்ந்து வருவதுடன் தொடர்ந்து தொண்டுகளை தன்னார்வத்துடன் பொதுநலமாய் செய்து வரவர, உலகினில் உள்ள மனித சமுதாயத்தில் உள்ள வஞ்சமான குணங்கள் மாறிடும், வக்கிர குணங்களும் மாறிடும், கொடூர குணங்களும் மாற்றம் அடைந்து மக்கள் இயல்பு நிலைக்கு வருவார்கள். மக்களிடத்து மனிதநேயம் பெருகி நற்பண்புகளும் பெருகி சிறப்படைவார்கள், பிரச்சனைகள் இல்லாத வாழ்வினை வாழ்வார்கள்.

உலக மக்கள் முருகப்பெருமானை வழிபடு தெய்வமாக ஏற்றுக் கொண்டு முருகப்பெருமானை வணங்கி முருகப்பெருமான் திருவடிகளிலே முழுச்சரணாகதியினை அடைந்திட, கலியுக மக்களுக்கு வளமான சிந்தனையும், மனோபலமும் பெருகிடுவதுடன் தானதரும நோக்கமும் பெருகிடும், அவர்களுக்கு செல்வநிலை பெருகிடும், நல்ல வருவாய் உண்டாகும், மக்கள் மனதினுள் தன்னம்பிக்கை பெருகி சிறப்படைந்து நல்வாழ்வை வாழ்வார்கள்.

சிறப்பறிவுமிக்க ஞானம் படைத்த அவதார ஞானகுரு ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஞான ஆட்சி உலகினில் பெருகி இந்த உலகமே ஞானபலம் பெற்று ஞானயுகமாற்றம் உருவாகும். ஞானயுகமாற்றமானது ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வழிகாட்டலில் அரங்கரின் மகத்துவம்மிக்க சீடர்களைக் கொண்டு தமிழகத்தில் இருந்து துவங்கி இந்த உலகம் முழுதும் பரவி முடிவில் உலகமே ஞானயுகமாக மாறிடும்.

மக்கள் எல்லாம் தூயநெறியினை பின்பற்றி நேர்மையுடன் வாழ்ந்து அரங்கனைப் பின் தொடர்ந்து அரங்கனின் சீடர்களாக ஆகி பின்பற்றி வர உலகினில் தரும ஞானஆட்சி விரைந்து அமைந்திடும் என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் குமரகுருபரர்.

–சுபம்–